# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/13 - 2018 ජූලි මස 09 වැනි සඳුදා - 2018.07.09

*2079/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 21/78* (xv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இக்கட்டளையின் மூலம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும், (2017, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 2037/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்), 1995, நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையைப் பின்வருமாறு திருத்துகின்றேன் :-*

*(1) அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "முகாமைத்துவத்துறைக் கற்கைகள் பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "2. கணக்கியல் மற்றும் நிதிப்பகுதி" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் :-*

*"3. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை*
*4. மனிதவள முகாமைத்துவத் துறை." ;*

*(2) அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "பிரயோக அறிவியல் பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல்* II *இல் காணப்படுகின்ற "4. மனையியல் பகுதி" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :-*

*"5. சுகாதார மேம்படுத்தல் துறை*
*6. கணினி கற்கைத் துறை." ;*

*கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ,*
*உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2018, யூலை 06.*

*7-794*


1A - PG 4114 — 508 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.